முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

அ.சா. 5 தேதி.07.01.2025

| SC. No. | 24/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகர் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் முலப்பாக்கம், தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3, 5, 6, 7, 8 ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 25.06.2021 அன்று மாலை 7.00 மணியளவில், நாங்கள் வசிக்கும் தெற்கு தெருவில் எங்கள் வீட்டில் இருந்து இரண்டு வீடு தள்ளி எனது மகனை ஆஜர் எதிரிகளை கல்லும், கட்டையாலும் அடித்தார்கள். நான் அப்போது வெளியே போய்விட்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது எனது மகன் மணிவேலன் சம்பவ இடத்தில் மயக்கமடைந்து கீழே கிடந்தார். சம்பவ இடத்தில் எங்கள் ஊரை சேர்ந்த நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். எனது மகனே அங்கிருந்து மயிலாடுதுறை, அருண் பிரியா மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக கும்பகோணம், சுபம் மருத்துவ மனைக்கு அழைத்து சென்றேன். இவ்வழக்கில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அருண் பிரியா மருத்துவ மனையிலும், சுபம் மருத்துவ மனையிலும் எனது மகனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று நான் கூறவில்லை, எனது மனைவி தான் கூறினார்கள். போலீசார் விசாணையில் நான் எனது மகன் மயக்கம் அடைந்து கிடந்தார் என்று கூறியுள்ளேன். ஆஜர் 1ஆம் எதிரியின் தங்கையை எனது மகன் நடு ரேட்டில் வைத்து மானபங்கம் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. அது போல் மானபங்கம் செய்யும் போது ஊர்காரர் அடித்து விரட்டினார்கள் என்றால் எனது மகனுக்கும், அந்த பெண்ணிற்கும்

பழக்கம் இருந்தது. ஊர்காரர்கள் அடித்து விரட்டும்போது எனது மகன் கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மகனுக்கும், அந்த பெண்ணிற்கும் பழக்கம் இருந்ததது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>

அ.சா. 6 தேதி.07.01.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 24/2023 | | |
| பெயர் | சம்பந்தம் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் முலப்பாக்கம், தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எங்கள் தெருவை சேர்ந்த கல்யாண சுந்தரம் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது <u>அ.சா.ஆ.5</u> ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது <u>அ.சா.ஆ.6</u> ஆகும். என்னுடன் மேற்படி இரண்டு ஆவணங்களிம் கல்யாண சுந்தரம் என்பவர் கையெழுத்து போட்டார். 27.06.2021 ஆம் தேதி அன்று நானும், கல்யாண சுந்தரம் அருகே மூங்கில் தோட்டம் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்தோம். அப்போது மயிலாடுதுறை காவல் துறையினர் நித்தீஸ் என்பவரை பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அவர் போலீசார் விசாரணையில் என்ன சொன்னார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நீத்தீஸ் வீட்டிற்கு போலீசார் என்னை அழைத்து சென்றார்கள். அங்கு போலீசார் என்ன செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்

<u>குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்பட்ட கையெழுத்து அடிப்பட்டு கீழே கிடந்ததற்காக கையெழுத்து வாங்கினார்கள். தற்போது காட்டிய கையெழுத்தை மூங்கில் தோட்டத்தில் வைத்து போட்டேன். அது மூங்கில் தோட்டம் பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். அங்கு பேருந்து ஏறுவதற்காக நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கும், மூங்கில் தோட்டத்திற்கும் சுமார் 1 1/2 பர்லாங் துாரம் இருக்கும். அ.சா.1

மணிவேலன் எனது தம்பி மகன் ஆவார். பேருந்து நிலையத்தில் நிறைய பேர் நிர்க்கும் போது என்னை எனது தம்பி மகன் அடிப்பட்டதற்காக சாட்சியாக அழைத்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்பட்ட கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, அடிப்பட்டது எனது தம்பி மகன் என்பதால் மூங்கில்தோட்டத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூங்கில் தோட்டம் பேருந்து நிலையத்தில் 1ஆம் எதிரியை போலீசார் விசாரணை செய்தார்கள் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.